திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், குலசேகரப்பட்டி கிராமம் புல எண்.348/3ஏ2–ல் பெருந்தலைவர் காமராஜரின் வெண்கலத்திலான முழு உருவச் சிலையை நிறுவ – அரசு அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா.2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.173 நாள்: 13 .11.2008.

படிக்கப்பட்டது:

1. அரசு கடித எண்.15611/சி3/94–6, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 12.6.1995.
2. அரசு ஆணை (நிலை) எண்.248, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 23.11.1998.
3. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் ந.க..சி2/3212/2008, நாள் 4.10.2008.

*****

**ஆணை:**

திருநெல்வேலி மாவட்டம்,தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் குலசேகரப்பட்டி கிராமம் புல எண்.348/3ஏ2–ல் பெருந்தலைவர் காமராஜர் முழு உருவ வெண்கலச் சிலையை அமைக்க கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர், திரு.எஸ்.கே.டி.பி.காமராஜ் அவர்கள் அனுமதி கோரியிருந்தார்.

2. தென்காசி வட்டம்,. கீழப்பாவூர் ஒன்றியத்தில் உள்ள குலசேகரப்பட்டி கிராமம் புல எண் 348/3A2–ல் 0.03.0 ஹெக்டேர் நிலம் கிராம ஆவணங்களில் மடம் என தாக்கலாகியுள்ளது என்றும் மேற்படி பிரஸ்தாப நிலம் பாவூர்சத்திரம் பேருந்து நிலையம் கீழ்ப்புறம் கீழப்பாவூர் செல்லும் ரோட்டின் வலதுபுறம் அமைந்துள்ளது எனவும், மேற்படி சிலை அமைக்க போதுமானதாக உள்ளது என்றும் மேற்படி சிலை அமைப்பதினால் போக்குவரத்திற்கு எந்தவிதமான இடையூறும் ஏற்பட வாய்ப்பில்லை எனவும், குலசேகரப்பட்டி ஊராட்சியில் மேற்படி சிலை அமைக்க ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.15/2007–2008, நாள் 25.4.2007–ல் தீர்மானம் நிறைவேறியுள்ளது. மேற்படி சிலை அமைக்க கோரியுள்ள இடம் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான இடம் அல்ல என திருநெல்வேலி கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) அவர்கள் தெரிவித்துள்ளார். திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் அறிக்கையில், மேற்படி சிலை அமைய உள்ள இடத்திற்கு தெற்கே தென்காசி திருநெல்வேலி நெடுஞ்சாலையும், மேற்கே சுரண்டை–அம்பாசமுத்திரம் ரோடு அமைந்துள்ளது என்றும் அருகில் பேருந்து நிலையம் உள்ளது என்றும் போக்குவரத்திற்கு இடைஞ்சல் எதுவும் இல்லை என்றும், மேற்படி இடத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் நாடார் இனத்தவர்களே அதிகம் வசித்து வருகிறார்கள் எனவும், பெருந்தலைவர் காமராஜர் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க அனுமதி வழங்க காவல்துறை சார்பில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேற்படி சார்நிலை அலுவலர்களின் அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அதனடிப்படையில் திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், குலசேகரப்பட்டி கிராமம் புல எண்.348/3ஏ2–ல் பெருந்தலைவர் காமராஜர் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க அரசின் அனுமதி அளிக்க திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்.

4. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவை மேலே படிக்கப்பட்ட ஒன்று மற்றும் இரண்டில் குறிப்பிடப்பட்ட அரசு கடிதம் மற்றும் அரசு ஆணைகளின்படி ஆய்வு செய்து, திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், குலசேகரப்பட்டி கிராமம் புல எண்.348/3ஏ2–ல் பெருந்தலைவர் காமராஜரின் முழு உருவ வெண்கலச் சிலையினை அமைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(I) சிலை வெண்கலத்தினால் சிலை வைப்பவர்களின் பொருட் செலவிலேயே அமைத்து அதனை பாதுகாத்து மற்றும் பராமரிக்கப்பட வேண்டும்.

(II) சிலையைச் சுற்றி நான்கு பக்கமும் இரும்பு கம்பிவேலி அமைத்து பாதுகாக்கப்பட வேண்டும்.

(III) சிலையை நல்ல உயரத்தில் பீடம் அமைத்து அதன் மேல் சிலையை நிறுவ வேண்டும்.

(IV) கம்பித் தடுப்பு நல்லமுறையில் அழகுற அமைக்கப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.